**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.43/2020**

**PW11**

| | | |
|---|---|---|
| **Name** | : | மரு. ச. ஸ்ரீவத்சா |
| **Father's Name** | : | சங்கர் |
| **Village** | : | |
| **Taluk/District** | : | திருவண்ணாமலை. |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20.11.2025.

Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசியராக அவசர சிகிச்சை பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.04.2018 அன்று காலை 11.00 மணியளவில் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது நெடுங்காவடி கிராமத்தை சேர்ந்த திரு. ராஜி த.பெ. சின்னபையன் என்னும் 45 வயது மதிக்கத்தக்க ஆண் பிரேதத்தை காவலர் திரு. சதீஷ் , 1269 என்பவர் பொறுப்பில் நமுனா எண். 1689507 உடன் எடுத்து வந்தார். காவலர் சதீஷ் மேற்படி இறந்துபோன ராஜி என்பவரை அடையாளம் தெரிந்த ஒரு ஆண் நபர் 24.04.2018 அன்று காலை 5.45 மணியளவில் நெடுங்காவடி கிராமத்தின் அருகில் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது சுயநினைவின்றி, உயிர் உபாதைகள் இன்றி காணப்பட்டார். உடல் முழுவதும் மரண விரைப்பு தன்மை காணப்பட்டது. கழுத்தில் ஒரு வெட்டுக்காயமும், நெஞ்சில் ஒரு வெட்டுக்காயமும் காணப்பட்டது. மேற்கண்ட பிரேதத்திற்கு விபத்து பதிவேடு எண். 2088472 பதிவு செய்து பிணவறைக்குள் பிரேதத்தை அனுப்பினேன். நான் பதிவு செய்த விபத்து பதிவேட்டின் நகல் **அ.த.சா.ஆ.7.** தட்டச்சு செய்யப்பட்ட நகலின் சிகிச்சைக்கு ஆஜரான நேரம் தவறுதலாக 10.00 மணி என்று தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

பிரேதத்தை  சதீஷ் என்ற காவலர் தான் கொண்டுவந்தார். மேற்படி நபர் எப்படி தாக்கப்பட்டார் என்ற வரலாறு காவலர் சதீஷ் சொல்லிதான் விபத்து பதிவேட்டில் பதிவு செய்தேன்.

Taken down by me in Open Court read over of the witness and to  acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.